# அரசறிவியலைக் கற்பதற்கான அணுகுமுறைகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## ஒப்பீட்டு அணுகுமுறை

ஒப்பீடு என்பதன் கருத்து "தொடர்பு படுத்துவது" அதாவது ஒன்றை இன்னொன்றுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதாகும். ஒரு சமூக அரசியல் தோற்றப்பாட்டையோ பிரச்சினையையோ கருப்பொருளையோ பிறிதொரு நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அது பற்றிய சிறந்த அறிவைப்பெற்றுக்கொள்ள முடியும்.

உதாரணம்: ஒரு நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு மிகவும் பொருத்தமான அரசாங்க முறை யாது என்பதைக் கண்டறிவதற்கு உலகிலுள்ள சில ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை அரசாங்க முறைகளை ஒப்பிட்டுப்பார்த்து தீர்மானிக்க முடியும்

## அரசியலை ஏன் ஒப்பீட்டு ரீதியில் கற்க வேண்டும்

இது தொடர்பாக கெனத் நியூட்டன் ஜோன் வென்டத் என்போர் தமது "Foundation of Comparative Politics" என்ற நூலில் கூறும் காரணிகள் இரண்டு..

1. ஒரு நாட்டின் அரசியலை சிறப்பாக விளங்கிக்கொள்வதற்கு ஏனைய நாடுகளின் அரசியலுடன் அதனை ஒப்பிட வேண்டும்
2. ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வரலாறு பின்னனி, நிறுவனங்கள் தொடர்பாக திரட்டிக்கொள்ளும் ஒப்பீட்டு ரீதியான புரிதலின்றி அந்நாடுகளின் அரசியலைப்பற்றி சிறப்பாக புரிந்து கொள்ள முடியாது



**எனவே அரசியலை ஒப்பீட்டு ரீதியில் கற்பதே சிறந்தது**



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**ஒப்பீட்டு அனுகுமுறையின் வகைகள்**

01. பழைமை ஒப்பீட்டு அணுகுமுறை
02. 20ம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அணுகுமுறை
03. சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

## படிமம் ஒப்பீட்டு அணுகுமுறை

- இது கிரேக்க உரோம மத்தியகால அரசியல் சிந்தனைகளில் பயன்படுத்தப்பட்டது
- அரிஸ்டோட்டில் தமது Politics எனற் நூலில் அக்கால நகர அரசுகளை வகைப்படுத்துவதற்கு இம்முறையை பயன்படுத்தினர்
- அரிஸ்டோட்டிலின் ஒப்பீட்டு வகைப்படுத்தலில்
  1. ஆட்சியாளர்களின் எண்ணிக்கை
  2. அரசாங்கங்களின் தூய மற்றும் சிதைந்த தன்மை அளவீடுகளில் பயன்படுத்திய ஆட்சிமுறைகள்







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 20ம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அணுகுமுறை

- இம்முறை 1960களின் பின்னர் அமரிக்கப் பல்கலைக்கழகங்களில் அரசியல் கற்கைகளின் விஞ்ஞான ரீதியான பின்னணியில் விருத்தி கண்டது

- அரசறிவியலின் செய்முறைகள் (Methodology) இயற்கை விஞ்ஞானச் செய்முறைகளை ஒத்த அனுபவம்சார் தன்மையினவாகும் என வாதிக்கப்பட்டது

- இங்கு அரசியல் யாப்புக்கள், அரசியல் வரலாறு என்பவற்றைப் பற்றி ஒப்பீடுகளை மேற்கொள்ளாது அனுபவம்சார் முறையில் அவதானிக்கக்கூடிய நிகழ்கால அரசியல் கலாசாரம், அரசியல் சமுதாயப்படுத்தல் அரசியல் நடத்தை போன்ற அரசியல் கருப்பொருளை அடிப்படையாக கொண்டு வேறுபட்ட அரசியல் முறைகளை ஒப்பீட்டு ரீதியாக கற்க முடியும்

### இம்முறையைப் பயன்படுத்தியவர்கள்

1. கப்ரியல் அல்மண்ட் (G.A.Almond)
2. கோல்மன் (J.S.Coleman)
3. லிப்ஸ்செட் (S.M.Lipsed)
4. சிட்னி வேர்பர் (Sydny Verba)
5. ஹன்டிங்டன் (S.P.Huntingtion)




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### சமகால ஒப்பீட்டு அணுகுமுறை

இவ் அணுகுமுறைக்குள் புதிய விடயங்கள் சேரும் அளவுக்கு நெகிழ்ச்சித்தன்மை பொருந்தியதாகும் உதாரணமாக

- அரசியல் நிறுவனங்கள்
- அரசியல் மாற்றங்கள்
- சமாதானச் செயன்முறைகள்
- ஜனநாயக மாற்றத்தின் திசைமுகங்கள்
- மனித உரிமைகள்
- தேசியவாத அரசியல்
- அரசியல் செயன்முறை
- சமூகம்,அரசியல் மோதல்கள்
- அரசின் இயல்பும் மாற்றங்களும்
- பிரஜைகள் செயற்பாடு
- பெண்களின் அரசியல் பங்கேற்பு
- சிவில் சமூகத்தின் அரசியற் செயற்பாடு போன்றன

- ஒப்பீட்டு அரசியல் கற்கையானது ஜனநாயகம், அரசியல் அபிவிருத்தி போன்ற இலட்சிய மாதிரி யிலமைந்த அளவுகோல்களின் படி மேற்கொள்ளப்படத் தேவையில்லை

- ஒப்பீட்டு ஆய்வின் நோக்கம் ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் யதார்தங்களிலிருந்து ஒப்பீட்டுப்படிப்பினை பெற்று அரசியல் ஆய்வை பலப்படுத்துவதாகும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஒப்பீட்டு அணுகுமுறையின் நன்மைகளும் தீமைகளும்

### நன்மைகள்

- பரந்த பாடப்பரப்பினைத் தேடும் திறனைத் தருகின்றது
- இது ஒரு யதார்த்தத்திற்கான தேடலாக மாறுகின்றது
- திட்டவட்டமான தகவல் பற்றிய தேடலை ஒப்பிடுகின்றது
- அரசியல் கோட்பாட்டின் ஒழுங்கு முறைக்கான ஒப்பீட்டாய்வை மேற்கொள்ள உதவுகின்றது
- ஐரோப்பிய பிரதேசங்களுடன் கட்டுண்ட நிலையில் இருந்து தனித்துவ மாதிரியை வழங்குகின்றது

### தீமைகள்

- அரசியல் அபிவிருத்திக்கானது என்ற அடிப்படையில் கோட்பாடுகளுக்குள் வலிமையிழந்த முறைமை-களையும் ஒப்பிடவேண்டிய நிலை
- சமூக அரசியல் கட்டமைப்புக்களில் அரசுக்கும் சமூகத்துக்குமிடையிலுள்ள பரஸ்பர தொடர்புகளில் வரிசையை சில வேளைகளில் ஏற்படுத்த இது காரணியாகலாம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## வினாக்கள்

ஒப்பீட்டு அணுகுமுறை

1. அரசறிவியலைக் கற்பதற்கான அணுகுமுறைகளில் ஒப்பீட்டு அணுகுமுறையின் முக்கியத்துவத்தினை ஆராய்க



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk